**IN THE COURT OF THE SUB JUDGE, DENKANIKOTTAI**

**MCOP.No.66/2023 C/W.64/2023**

Deposition of witness for **RW1** for **Respondent** and solemnly affirmed and oath for sworn taken file by Tr.S.Prakash, Gr.II Bench Clerk in accordance with the provisions of Act 1975.

| | | | |
|---|---|---|---|
| Name | : Parameshwaran | Father Name | : Rathinavel |
| Village | : | Age | : |

**நாள்:12.03.2026.**

**எ.ம.சா.1. முதல் விசாரணை இரு மனு 3வது எதிர்மனுதாரர்கள் தரப்பில் :**

நான் **வட்டார போக்குவரத்து அலுவலகம்** ஒசூரில் **இளநிலை உதவியாளராக** பணிப்புரிந்து வருகிறேன். வட்டார போக்குவரத்து அலுவலருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. அவருக்கு மினி பேருந்து தொடர்பான வழித்தடம் ஆய்வு பணி இருப்பதால் அவர் எனக்கு சாட்சியம் அளிக்க அனுமதி வழங்கி உள்ளார். அந்த அனுமதி கடிதம் **சா.சா.ஆ.Y1** ஆகும். அழைப்பாணையில் கேட்டுள்ள கார்த்திக் த/பெ.வெங்கடேஷ், MCR நகர், ராயக்கோட்டை ரோடு, தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் என்பவருக்கு எங்களது அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் வழங்கப்படவில்லை. TN 29 AH 3886 என்ற வாகனம் ஆட்டோ ஆகும். அந்த வாகனத்திற்கு தருமபுரியில் பர்மிட் எடுத்திருப்பதால் அந்த வாகனத்தை தருமபுரியை சுற்றி 30 கி.மீக்குள் தான் ஓட்டவேண்டும். இந்த வழக்கு விபத்து கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடந்திருக்கிறது. அந்த TN 29 AH 3886 என்ற வாகனத்தின் பர்மிட்டின் கணினி நகல் **சா.சா.ஆ.Y2** ஆகும். அந்த TN 29 AH 3886 என்ற வாகனத்திற்கான form 24 சான்றிதழின் கணினி நகல் **சா.சா.ஆ.Y3** ஆகும். விபத்தின் போது இந்த வாகனத்திற்கு பிட்னஸ் சான்றிதழ் உள்ளது.

**குறுக்கு விசாரணை இருமனு மனுதாரர்கள் தரப்பில்**

தருமபுரி, பாலகோடு தாலுக்காவிற்கு ஆரம்பத்தில் ஒரே RTO அலுவலகம் இருந்து தற்போது பாலகோடுற்கு தனியாக RTO அலுவலகம் வந்துள்ளது என்றால் சரிதான். 30 கி.மீக்குள் அடுத்த மாவட்டம் வந்தாலும் அந்த வாகனத்தை அடுத்த மாவட்டத்திற்கு ஓட்டமுடியுமா என்றால் ஓட்ட முடியாது. அடுத்த மாவட்டத்தில் அந்த வாகனத்தை ஓட்டுவதற்கு தருமபுரியில் அனுமதி வாங்கியிருக்கிறார்களா இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஓட்டுநருடைய முழுவிவரமும் கொடுத்தால் தான் ஓட்நர் உரிமம் இருக்கிறதா இல்லையா என்பதை தேடிப்பார்த்து சொல்லமுடியும் என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**

ஓம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.